**O.S.No.23/2014**

**PW3 : ரங்கசாமி** தேதி 13.11.2025

வாசா 3 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4, 5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

துளசிமணி கொம்மங்கோயிலில் எத்தனை ஏக்கர் பூமி இருந்தது என்றால் பூமி உள்ளது. 7 – 8 ஏக்கர் உள்ளது. அந்த பூமியை யார் அனுபவிக்கிறார்கள் துளசிமணி அவருடைய மனைவி மகன் ஆகியோர் அனுபவத்து வருகிறார்கள். சின்னசாமிக்கு 10 ஏக்கர் பூமி இருந்தது. தற்போதும் உள்ளது. அந்த பூமியை யார் அனுபவிக்கிறார்கள் என்றால் அவரும் மகள் 2ம் வாதி கல்பனா ஆகியோர் அனுபவிக்கிறார்கள். துளசிமணி இறந்து விட்டார். துளசிமணி இறக்கும் வரை அவருடைய மனைவி மகன் குமார் ஆகியோர் ஒரே குடும்பமாக வசித்தார்கள் என்றால் சரிதான். சின்னசாமியும் அவர் மகள் கல்பனாவும் ஒரே குடும்பமாக வசித்தார்கள். துளசிமணி யாருக்கு எந்த தேதியில் சொத்தை விற்றார் என்றால் ஈரோடு முத்துசாமிக்கு விற்றார். வருடம் 1995 ல் விற்றார். தேதி தெரியாது. 3 ஏக்கர் விற்றார். நான் அந்த பத்திரத்தில் சாட்சி கையெழுத்திடவில்லை. துளசிமணியின் மனைவி லோகாத்தாள் எவ்வளவு கிரையம் வாங்கினார் என்றால் 1 ஏக்கர் வாங்கினார். அந்த கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்திடவில்லை. லோகாத்தாள் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. துளசிமணி பணம் கொடுத்து லோகாத்தாள் கிரையம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. லோகாத்தாள் என்ன தொழில் செய்தார் அவருக்கு என்ன வருமானம் வந்தது என்று தெரியுமா என்றால் தனிப்பட்ட வருமானம் இல்லை. எனக்கு அருகில் பூமி உள்ளது. என்னுடைய சொத்தின் சர்வே எண் தெரியாது. எனக்கு கிரையம் மூலம் வந்தது. நான் கிரையம் வாங்கிய தேதி

தெரியாது. என்ன விலைக்கு வாங்கினேன் என்றால் 112000/-. என்னுடைய கிரய பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்திட்டுள்ளார்கள் என்றால் தெரியாது. சின்னசாமிக்கு என்ன தொழில் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல விவசாயம் செய்து வந்தார். ரியல் எஸ்டேட் செய்து வந்தார் என்றால் இல்லை. சின்னசாமியும் லோகாத்தாளும் கடன் வாங்கியதாக சொல்லியிருக்கிறேன். நான் உடன் செல்லவில்லை என்றால் சரியல்ல. போனேன். வெள்ளோடு போனேன். கடனுக்கு என்ன பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் அக்ரிமெண்ட் எழுதி கொடுத்தார்கள் அவசர தேவைக்காக வாங்கினார்கள். வளர்மதி பைனான்சில் கடன் வாங்கினார்கள். யார் பைனான்ஸ் நடத்தினார்கள் என்றால் 2 – 3 பேர் நடத்தி வந்தார்கள். நடராஜ் என்பவரிடம் கடன் வாங்கினார்கள். அக்ரிமெண்ட் போட்ட தேதி தெரியுமா என்றால் 8.4.96. எனக்கு 3 ஆண் மக்கள். 2 பேருக்கு திருமணம் ஆகிவிட்டது. 2 மகன்களின் பிறந்த தேதி தெரியும். 14.1.81 மற்றும் 21.3.83. என் மகன்களின் திருமண தேதி தெரியாது. அக்ரிமெண்ட் எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் அக்ரிமெண்ட் பேரில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாகிவிட்டது என்றால் சரியல்ல தீர்ப்பாகவில்லை. தீர்ப்பின் பேரில் நீதிமன்றம் கிரைய பத்திரதம் எழுதி கொடுத்து விட்டது என்றால் சரியல்ல. சின்னசாமியும் துளசிமணியும் வளர்மதி பைனான்சில் கடன் வாங்கியதாகவும் அக்ரிமெண்ட் எழுதி கொடுத்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை விற்பதற்காக தான் லோகாத்தாளும் சின்னசாமியும் அக்ரிமெண்ட் போட்டு கொடுத்தார்கள் என்றும் அந்த வழக்கில் தீர்ப்பான பிறகு அதை முறியடிக்கும் எண்ணத்தில் துளசிமணியின் மகன் 1ம் வாதி குமார் சின்னசாமியின் மகள் 2ம்வாதி கல்பனா ஆகியோர் பொய்யான வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்தகள் என்றும் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை யார் சாட்சியம் அளிக்க அழைத்தார்கள் என்றால் குமார் மற்றும் கல்பனா அழைத்தார்கள். நீதிமன்றம்

எழுதி கொடுத்த கிரைய பத்திர படி நடராஜனும் மற்ற இரண்டு பேரும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 4 – 6 பிரதிவாதிகள் யார் என்று தெரியுமா என்றால் நடராஜன் பாபு ஆகியோர். வழக்கு விவரங்களை படித்து பார்த்தேன். என்ன வழக்கு என்று தெரிந்து கொண்டேன். எனக்கு கையெழுத்து மட்டும் தான் போட தெரியும். எனக்கு வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும் குமாரும் கல்பனாவும் சொல்லி கொடுத்ததன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

நான் 10 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன்.